1984 பிப்ரவரி 23]

களை திருடிக்கொண்டு போவதும் அதன் பேரில் இதே மன்றத்தில் கேள்வி கிளப்புவதும் வழக்கமாக இருக்கிறது. அதேயிடத்தில் அந்த மரங்களை வெட்டுபவர்கள் ரெவின்யூ புறம்போக்கு மரங்களையும் வெட்டிவிடுகிறார்கள் காட்டு இலாகா இடம் என்று. ஆகவே, இந்த இடங்களை வரையறுத்து, ரெவின்யூ புறம்போக்கு எந்தெந்த இடங்கள் என்பதைத் திட்டவட்டமாக வரையறுத்து அதற்கு தகுந்த பாதுகாப்பு போட்டு அந்த மரங்களை கான்ட்ராக்டர்கள் அல்லது யாரும் வெட்டமுடியாத அளவிற்கு திருடர்களைப் பிடிப்பதற்கு தகுந்த ஏற்பாடுகள் என்ன செய்யப்பட்டிருக்கின்றன என அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9–30]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அது காட்டிலாகா மரமானாலும் சரி, ரெவின்யூ இலாகா புறம்போக்கு நிலத்திலுள்ள மரமானாலும் சரி, இரண்டுமே அரசுக்குச் சொந்தமான மரங்கள்தான். ஆகவே காட்டிலாகா மரத்தை வெட்ட வேண்டுமென்றோ அல்லது ரெவின்யூ புறம்போக்கு மரத்தை வெட்ட வேண்டுமென்றோ, அரசுக்கு அந்த எண்ணம் இல்லை. இரண்டையுமே பாதுகாக்கின்ற பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது. அப்படி தவறு நடந்திருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இந்தத் தவற்றைச் செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது. இனிமேல் இம்மாதிரியான தவறு நடக்கக்கூடாது என்பதற்காகத்தான், அரசின் இரண்டாவது செயலாளர் திரு. டி. வி. அந்தோணி அவர்களையும், கூடுதல் தலைமை வனப் பாதுகாவலர் அவர்களையும் கொண்ட ஒரு குழுவைப் போட்டு, ஆராய்ந்து வருகிறோம். விரைவில் நடவடிக்கை எடுப்போம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY LIBRARY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தென் ஆலப்பாக்கம் கிராமப் புறம்போக்கு நிலத்தின் மனைப் பட்டா கோரி மனு செய்துள்ள ஏழை மக்கள்.

139—(*வினா எண். 18805)—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி மயிலம் ஒன்றியம் தென் ஆலப்பாக்கம் கிராமத்தில் புறம்போக்கு இடங்களில் வீடு கட்டி வசித்து வரும் ஏழை மக்கள் மனைப்பட்டா கோரி அரசுக்கு மனு செய்துள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) இல்லை.

(ஆ) இருந்தபோதிலும், திண்டிவனம் வட்டம் தென் ஆலப் பாக்கம் கிராமத்தில் ரி.ச. எண். 121/3 நத்தம் புறம்போக்கில் ஆக்கிரமித்து வீடு கட்டியிருப்பதை முறைப்படுத்தி 4 வீடுகளுக்கு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது.

திரு. கே. எம். தங்கமணி : தலைவர் அவர்களே, கடந்த நான்கு ஆண்டுகளாக இந்த கோரிக்கை பற்றித் தனித்தனியாக தென் ஆலப்பாக்கம் கிராமத்தில் வாழுகின்ற விவசாயக் கூலிகள் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்று வருவாய்த்துறை அதிகாரிகளிடம் மனு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாக அந்த நிலங்களையெல்லாம் வீட்டுமனைப் பட்டா செய்து கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு புறம்போக்கு நிலங்களில் குடியிருப்பவர்களுக்கு, அந்த நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையென்றால், விரைவிலே அதை பட்டா செய்து கொடுப்பதற்கு அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்.

திரு. கே. எம். தங்கமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அவர்கள் குடியிருந்து வரும் அந்த இடங்கள் எல்லாம் அரசாங்கத்திற்கு தேவையில்லை என்பதை அங்குள்ள எல்லா மக்களும் ஒத்துக்கொள்கின்ற உண்மை. வருவாய்த்துறை அதிகாரிகள் வேண்டுமென்றே காலதாமதம் செய்து வருகிறார்கள். அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க காலத்தை வீணடித்து வருகிறார்கள். எனவே, உடனடியாக உத்தரவு வழங்கி, அவர்களுக்கு அந்த வீட்டு மனைப்பட்டா வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்குள்ள எல்லா பொதுமக்களும் அரசுக்குத் தேவை இல்லை என்று சொன்னால், மகிழ்ச்சிதான். எந்த இடத்திலும் அப்படிச் சொல்வதில்லை. இருந்தாலும்,, வேண்டுமென்றே வருவாய்த் துறை அதிகாரிகள் காலதாமதம், செய்து வருவார்களேயானால், விரைவில் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்யும்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, நமது விதிப்படி பாங்கியில் கடன் வாங்குவதற்கோ, கூட்டுறவு வங்கிகளில் கடன் வாங்குவது என்றாலோ, அவர்களுக்குச் சொந்த சொத்து, பட்டா இருந்தால்தான், அதுவும் ஏழை எளிய மக்களுக்கு, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கு ஏதாவது உதவி கிடைக்கின்ற நிலைமை இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆனால், அதே சமயத்தில் கிராமங்களில் கிராம நத்தம் புறம்போக்கில் வாழ்ந்து

1984 பிப்ரவரி 23]

வருகின்றவர்களுக்கு, சொந்த பட்டா கிடையாது. ஆனால், இடைக்காலத்தில் இப்படி வாழ்ந்து கொண்டு வருகின்றவர்களுக்கு அவர்கள் பின்தங்கியவர்களாக இருந்தாலும், ஆதிதிராவிட மக்களாக இருந்தாலும், முற்போக்கு வகுப்பினராக இருந்தாலும் அவர்கள் வாழ்ந்து வருகின்ற இடங்களுக்கு பட்டா, கொடுக்க வேண்டுமென்ற நிலைமை ஏற்கெனவே இருந்தது. ஆனால், என்ன காரணத்தினாலோ கடந்த இரண்டு ஆண்டுகளாக அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, புறம்போக்கு நிலத்திலே வாழ்வது என்பது ஒன்று; கிராம நத்தம் புறம்போக்கிலே வாழ்வது என்பது மற்றொன்று. வாழ்கின்ற இடத்திலே பட்டா போட்டு கொடுத்தால், அரசாங்கம் கொடுக்கின்ற கடன் உதவியைப் பெறுவதற்கு உதவியாக இருக்கும். அது அவர்களுக்கு உடனடியாகக் கிடைப்பதற்கு, அது திண்டிவனமாக இருந்தாலும் அல்லது மற்ற இடங்களாக இருந்தாலும், அவர்களுக்கு அந்த உதவி கிடைப்பதற்கு அரசு முயற்சி செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசினுடைய தேர்தல் அறிக்கையில், விரைவாக எல்லோருக்கும் பட்டா கொடுக்க வேண்டுமென சொல்லியிருக்கிறோம். அதன்படி, உங்களுக்குச் சொல்ல, வேண்டுமென்றால், சென்ற 1981–82-ல் 94,000 வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1982–83-ல் 1,49,000 பேர்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு அதையும் மிஞ்சிப் போகும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, வீட்டு மனைப் பட்டா கொடுப்பதிலே இந்த அரசு கண்ணும்கருத்துமாக இருந்து விரைவிலே கொடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொந்தகையில் வருவாய் ஆய்வாளருக்காக கட்டப்பட்ட குடியிருப்பு.

140—(* வினா எண். 19687)—திரு. க. பாரமலை: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் மானாமதுரை வட்டாரம் கொந்தகையில் வருவாய் ஆய்வாளருக்காகக் கட்டப்பட்ட கட்டிடம் முடிக்கப்பெறாமலும், கட்டிய கட்டிடமும் உபயோகப் படுத்த இயலாத நிலையிலும் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடக்கை என்ன?